Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2024**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 01 - வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | எஸ்டேட் வேலை |
| பெயர் | - | சந்திரா | வட்டம் | - | |
| க/பெ | - | மகேஸ்வரன் | சமயம் | - | |
| கிராமம் | - | கருமலை எஸ்டேட் | வயது | - | 39 |
| சாதி | - | - | | | |

**03.10.2024**
**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை:

1. எதிரியை எனக்குத் தெரியும். எனக்கு உறவினர் ஆவார். கடந்த 22.11.2023-ம் தேதி எங்கள் எஸ்டேட்டில் ராஜா என்ற பையன் வால்பாறை அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். அவரை அன்றைய தினம் அங்கிருந்து கருமலை எஸ்டேட்டுக்கு கொண்டு செல்வதற்காக எதிரி டிராக்டர் ஓட்ட எனது கணவர் உட்பட மற்றும் சிலம் அந்த டிராக்டரில் ஏறி இறந்த ராஜா-வை கொண்டு சென்றபோது நடுமலை பாலத்தில் டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. அந்த விபத்தில் எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. டிராக்டிரல் சென்ற மற்ற 17 நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது. எனது கணவரை வால்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கிருந்து கோயமுத்தூர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். 2, 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தபோது கோயமுத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் வந்து விசிரித்தார்கள். புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களைத்தான் போலிசாரிடம் புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் விபத்தினை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து எப்படி, எதனால் நடந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் கையெப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் புகார் வாக்குமூலத்தினை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கு விபத்திற்கும் சம்மந்தமில்லையென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.